முருகப்பெருமான் துணை

**மகான் குலச்சிறை நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.10.2023,** செவ்வாய்கிழமை

1. மாதவ ராஜனே அரங்கனே
   மறுமைதனை மக்கள் வெல்ல
   ஆதரவாய் ஞானம் அருளியே
   அவதாரம் எடுத்த தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசியதும் சோபகிருது தரிவை திங்கள்
   அறிவிப்பேன் மூவேழீர் திகதி குசன் வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள், 10.10.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் குலச்சிறை நாயனாரும்
   வையகம் வளமுற உரைப்பேன்
   சோரமின்றி தருமம் வழங்குகின்ற
   சிவஞானி அரங்கன் தருமம்
4. தருமம் வளர்ந்து ஓங்கவே
   தவசியின் ஆற்றல் பலமாக
   பெருமைபட இயற்கை பலமும்
   பொன்மாரி பொழிந்து கருணைபட
5. கருணைபட நீர்நிலை வளம்
   கண்டுரைப்பேன் குடிநீர் பஞ்சமிலா
   உருவாகி கழனி கிருஷியென
   உணவுக்குப் பஞ்சமும் இல்லா வண்ணம்
6. வண்ணமுடன் செழித்தோங்கி
   வறுமை பிணி அனுகாதபடி
   எண்ணமும் தூய்மை கண்டு
   எவ்வுயிரும் தன்னுயிர் எனும்

7. எனும் உயர்நிலை நாடியே
எங்கும் ஞானிகள் ஸ்பரிசம்
ஞானமாக வெளிப்பாடாகியே
ஞானவான்கள் படைபெருகி

8. பெருகியே அரங்கனை ஏற்ற
பிரணவக் குடிலை ஏற்ற நல்
முருகப் பெருமான் காட்சிகண்ட
முழுமை நிறைந்த மக்களாக

9. ஆகவே படைகள் நிரம்ப
அரங்கன் ஆளுமை பெருகிட
வகையான ஞானத் தலைமை
வந்தடையும் கலியினில் சடுதி

10. சடுதி ஞான ஆட்சி
சங்கடம் போக்கி மீட்கும்
சடாட்சரனின் ஞான ஆட்சி
சாற்றிடுவேன் வையகம் அடையும்

11. அடையவே தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி பரவிட
தடையற தரணி எங்கிலும்
தவசியின் ஆட்டம் துவங்கும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—